

தாராபுரம் (தனி) சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் தவகல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் கழக துணைப் பொதுச் செயலாளர், முன்னாள் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் திருப்பூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் இல.பத்மநாபன், கழக மகளிர் அணி துணைச் செயலாளர், முன்னாள் அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ், கழக இளைஞர் அணி துணை செயலாளர், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர், முன்னாள் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா சிறப்புரையாற்றினார். உடன் கழக தகவல் தொழில்நுட்ப அணி துணை மற்றும் இணைச் செயலாளர்கள், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் கழக சார்பு அணிகளின் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

### விலைவாசி உயர்வு – கடும் மின்வெட்டைத் தீர்க்க வழியில்லை!

# தமிழ்நாட்டில் மக்கள் புரட்சி வெடிக்கும் நிலை ஏற்படும்!

## புதுக்கோட்டையில் முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!



புதுக்கோட்டை செப்13

நடந்து முடிந்த சட்டப்பேரவை கூட்டத் தொடரில் மிசா குறித்து பேசிய முதல்வரை கண்டித்து புதுக்கோட்டை திலகர் தேர்தலில் திமுக சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் முன்னாள் அமைச்சர்கள் எஸ்.ரகுபதி, சிவ. வீ.மெய்யநாதன், புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன், டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ உள்ளிட்ட ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டு கண்டன முழக்கம் எழுப்பினர்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி,

நடிகர் விஜய் சினிமாவில் ஹீரோ, அரசியலில் வில்லன் என்று செயல்பட்டு வருகிறார்.

சட்டப்பேரவையில் அவதூறாக பேசிய முதல்வரை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது/

சர்க்காரியா கமிஷன் வழக்கில் ஏற்கனவே குற்றம் சாட்டப்பட்டவர்கள் விடுதலை ஆகிவிட்டார்கள்.

குற்றப்பத்திரிகையை எடுத்து வைத்துக் கொண்டு அவதூறாக முதல்வர் சட்டசபையில் பேசினார்.

தீர்ப்புகள் குறித்துதான் பேசப்பட வேண்டுமே தவிர குற்றப்பத்திரிகையை வைத்துக் கொண்டு குற்றச்சாட்டை முன்வைக்க கூடாது.

அதே போன்று அமலாக்கத்துறை வழக்கில் குற்றங்கள் குறித்து கருத்துதான் தெரிவிக்கப்பட்டு உள்ளதே தவிர நீதிமன்றத்தில் வழக்கு முடிந்து தீர்ப்பு வரவில்லை.

தீர்ப்பு வந்த பிறகு அது குறித்து விமர்சனம் செய்யலாம்.

மிசா காலத்தில் எங்கள் தலைவர் எதற்காக சிறை சென்றார் என்பது அனைவருக்கும் தெரியும். எதற்காக போனார் என்று அமைச்சர் நிர்மல் குமார் கேட்கிறார், அவருக்கு வரலாறு தெரியாது.

வரலாற்றை மாற்ற பார்க்கும் இயக்கமாக இன்றைக்கு தமிழக வெற்றிக்கழகம் உள்ளது.

இதே நிலை நீடித்தால் இந்தியாவிற்கு சுதந்திரம் வாங்கித் தந்தது காந்தி கிடையாது. விஜய் தாத்தாவுக்கு தாத்தா என்று அவர்கள் ரீல்ஸ் போடுவார்கள். அதையும் மக்கள் நம்பக்கூடிய சூழ்நிலை ஏற்படும்.

அபாண்டமாக பேசுவதையே தொழிலாக தமிழக வெற்றி கழகத்தினர் வைத்துள்ளனர்.

உண்மையை ஒரு தடவையாவது பேசுவார்களா?

சட்டமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் 15 குற்றச்சாட்டுகள் குறித்து கேள்வி கேட்டிருந்தார். அதற்கெல்லாம் முதலமைச்சர் பதில் கூறவில்லை.

யாராவது லஞ்சம் வாங்கினால் விஜய் மாமாவிடம் கூறி விடுவேன் என்று கூறுங்கள் என்று முதலமைச்சர் கூறினார். லஞ்சம் வாங்குவது குறித்து வெளியே கூறியவர்கள், அடுத்த நாள் அவர் உயிரோடு இல்லை, இருப்பது கிடையாது, இதுதான் இன்றைய நிலை.

தமிழகத்தில் தற்போது கடும் மின்வெட்டு ஏற்பட்டுள்ளது

இதைத் தீர்ப்பதற்கு முதல்வர் நடவடிக்கை எடுக்கவில்லை.

தமிழக முழுவதும் தற்போது ஒரு மணி நேரம் மின்வெட்டு என்று மறைமுகமாக அறிவித்து விட்டனர். இதை தமிழக அரசும் ஒத்துக் கொண்டு விட்டது போல் தான் செயல்பட்டு வருகிறது

விலைவாசி உயர்வு விண்ணை முட்டி விட்டது. இதே நிலை நீடித்தால் இந்தியாவிலேயே முதல்முறை யாக தமிழகத்தில் மக்கள் புரட்சி வெடிக்கும் நிலை ஏற்படும்.

அந்த புரட்சிதான் இந்த ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கப் போகிறது.

தி.மு.க. அரசு கார் பந்தயம் நடத்தியதை அப்போது தமிழக வெற்றிக் கழக தலைவர் விமர்சனம் செய்தார். ஆனால் தற்போது அவரே 400 கோடி ரூபாய் செலவில் கார் ரேஸ் நடத்துவதற்கு தனி மைதானம் அமைக்கப்படும் என்று கூறியுள்ளார்.

இந்தியாவிலேயே விளையாட்டுக்குரிய தலைநகரமாக தமிழகத்தை தி.மு.க. ஆட்சி கொண்டு வந்துள்ளது.

காலை உணவுத் திட்ட விழாவிற்கு ஆசிரியர்களே செலவு செய்ய வேண்டும் என்று தமிழக அரசு கூறிவிட்டதாக தகவல் வந்துள்ளது. இதன் மூலமாக ஆசிரியர்களை கேவலப்படுத்தி கொச்சைப்படுத்தும் விதமாக அரசு நடந்து கொண்டு வருகிறது

இரண்டு தொகுதி இடைத்தேர்தல் என்பது சாம்பிள்தான்.

தமிழகத்தில் நடைபெற்று வரும் எல்லா கருத்துகளையும் மக்களிடம் எடுத்து கூறுவோம்.

இரண்டு தேர்தலிலும் வன்னிய சமுதாய மக்கள் என்ன முடிவு எடுக்கிறார்களோ அதுதான் முடிவாக இருக்கும்.

சட்டத்துறை அமைச்சர் என்ற முறையில் கரூர் சம்பவத்தின் போது முதல் குற்றவாளியாக விஜயை சேர்க்க வேண்டும் என்று நான் முதல்வரிடம் மன்றாடினேன். ஆனால் மனிதாபிமான அடிப்படையில் அன்றைய முதல்வர் எங்களுடைய தலைவர் விஜய் மீது வழக்கு பதியாமல் விட்டுவிட்டார். இது எங்களுக்கு மிகப்பெரிய வருத்தமாகவும் உள்ளது.

கூட்டணிக் கட்சிகளை மதிக்கக்கூடிய தலைவர்தான் எங்களுடைய தலைவர்.

எங்களுடன் இருந்த விடுதலை சிறுத்தைகள் கட்சி வேறு, தற்போது விஜய் கூட்டணியில் உள்ள விடுதலை சிறுத்தை கட்சி வேறு.

கூட்டணியில் இருந்து வெளியேறியவுடன் எங்களை பாராட்ட மாட்டார்கள். அவதூறுதான் பேசுவார்கள். தற்போது அதுதான் திருமாவளவன் செய்துள்ளார்.

விடுதலை சிறுத்தைகள் தற்போது திருமாவளவனோடு உள்ளதா அல்லது விஜய்யுடன் உள்ளதா என்பதை அவர் கூற வேண்டும்.

வைகோ மற்றும் துரை வைகோ ஆகியோர் அரசியல் ஜோக்கர்ஸ்

சந்தர்ப்பவாத அரசியல்வாதிதான் இருவரும் என்று கூறினார்.

### அபுதாபியில் நடைபெற்ற சதுரங்கப் போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற

# குவைத் வாழ் தமிழ் மாணவனுக்குப் பாராட்டு விழா!

## சிதம்பரம் ந. தியாகராஜன் தலைமையில் நடைபெற்றது!

குவைத், செப்.14-

அபுதாபியில் நடைபெற்ற சதுரங்கப் போட்டிகளில் பல சாதனைகள் படைத்து வெள்ளி மற்றும் தங்கப் பதக்கங்கள் பெற்ற "குவைத் வாழ் தமிழ் மாணவனுக்கு பாராட்டு", தி.மு.க., அயலக அணி. குவைத் பொறுப்பாளர் சிதம்பரம் ந.தியாகராஜன் தலைமையில் நிர்வாகிகள் நேரில் சென்று வாழ்த்தினர்.

தமிழன் எங்கு இருப்பினும் தமிழனே, தமிழனோடு கரம் கோர்ப்பது திராவிட முன்னேற்றக் கழகம் மட்டுமே எனும் தமிழகத்தின் முன்னாள் முதல்வர், திராவிட மாடல் நாயகர், கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின், எதிர்க்கட்சித் தலைவர், இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் ஆணைப்படி,

கழக அயலக அணியின் தலைவர் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. மற்றும் செயலாளர் புதுக்கோட்டை எம்.எம். அப்துல்லா மு.எம்.பி ஆகியோரின் வழிகாட்டுதலின் படி இளம் வயதில் சதுரங்க போட்டிகளில் பல சாதனைகள் படைத்து , அபுதாபி சர்வதேச சதுரங்கப் போட்டியில் பல பதக்கங்கள் வென்ற தமிழகத்தை சேர்ந்த குவைத் மாணவர் மித்திலேஷ் ரஞ்சித் குமாரை, தி.மு.க., அயலக அணி குவைத் நிர்வாகிகள் நேரில் சென்று வாழ்த்தினர்.

அபுதாபியில் 2026 ஆகஸ்ட் 15 முதல் 26 வரை நடைபெற்ற 32வது அபுதாபி சர்வதேச சதுரங்க விழாவில் உலகின் சுமார் 80 நாடுகளைச் சேர்ந்த வீரர்கள் பங்கேற்றனர்.

இந்தியாவை பிரதி நிதித்துவப்படுத்தி, தமிழ்நாட்டின் சிவகங்கை மாவட்டம் காரைக்குடியைச் சேர்ந்த வரும், தற்போது குவைத்தில் வசித்து வரும் ரஞ்சித் குமார் - சாந்தி தம்பதியரின் மகனுமான மித்திலேஷ் ரஞ்சித்குமார், பல்வேறு பிரிவுகளில் சிறப்பாக விளையாடி பதக்கங்கள்,கோப்பை கள் மற்றும் ரொக்கப் பரிசுகளை வென்று சாதனை படைத்துள்ளார்.

குவைத்தில் உள்ள கல்ஃப் இந்தியன் ஸ்கூல் பள்ளியில் கல்வி பயிலும் மித்திலேஷ், இந்தப் புகழ் பெற்ற போட்டியில் 4வது முறையாக பங்கேற்றது குறிப்பிடத்தக்கது.

அபுதாபியில் நடந்த சதுரங்க போட்டிகளில்

மித்திலேஷ் பெற்ற சாதனைகள்:

ஸ்கூல் U15 பிரிவு - தங்கப் பதக்கம்

ஜூனியர் ஓபன் பிரிவு - வெள்ளிப் பதக்கம்

அகாடமி பிரிவு - வெள்ளிப் பதக்கம் ஓபன் A பிரிவு - 9வது இடம்.

மேலும் பல கோப்பைகள் மற்றும் ரொக்கப் பரிசுகள் பெற்றுள்ளார்

கடந்த ஆண்டு இதே சர்வதேச போட்டியின் ஜூனியர்ஸ் பிரிவில் தங்கப் பதக்கம் வென்று சாம்பியன் பட்டம் பெற்ற மித்திலேஷ், இந்த ஆண்டும் தனது திறமையை நிரூபித்து தொடர்ச்சியான வெற்றிகளைப் பதிவு செய்துள்ளார்.

கடந்த ஆண்டு சாம்பியன் பட்டம் பெற்ற மித்திலேஷ் ஐ பாராட்டி தி.மு.க. அயலக அணி குவைத் சார்பில் "இளம் சாதனையாளர்" விருது வழங்கியது குறிப்பிடத்தக்கது.

இளம் வயதிலேயே சர்வதேச அளவில் சாதனைகள் படைத்து வரும் மித்திலேஷ் ரஞ்சித்குமார், இந்தியா, தமிழ்நாடு மற்றும் குவைத் தமிழ் சமூகத்திற்கு பெருமை சேர்த்துள்ளார்.

இந்த செய்தியறிந்த குவைத்தில் உள்ள தி.மு.க. அயலக அணியின் நிர்வாகிகள் குவைத் நாட்டின் பொறுப்பாளர் சிதம்பரம் ந.தியாகராஜன் தலைமையில் செயலாளர் புதூர் உத்தமனூர் ஜலீல் முஸ்தபா, துணைச் செயலாளர் மருதூர் ம.பிரேம்குமார்,

தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர் மேட்டு விளைஜ.ஜானவாஸ், தொண்டரணி துணைச் செயலாளர் உடையார்பாளையம் எஸ்.செந்தில்குமார் ஆகியோர் நேரில் சென்று அவரை வாழ்த்தி மகிழ்ந்தனர்.

மேலும் அவர் முன்னெடுக்கும் அனைத்து முயற்சிகளுக்கும் தி.மு.க. துணை நிற்கும் என உறுதி அளித்தனர். கழக நிர்வாகிகள் நேரில் சென்று வாழ்த்தியது இந்த மாணவனுக்கு ஊக்கத்தையும், உற்சாகத்தையும் அளித்தது. மேலும் அவரின் பெற்றோர் மிகவும் மகிழ்ச்சி அடைந்தனர்.

### வாக்களித்த மக்களை ஏமாற்றி பதவிக்காக கட்சி மாறிய

# சுயநல அரசியலுக்கு - இடைத்தேர்தலில் மக்கள் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்!

## 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் வேண்டுகோள்!

சென்னை, செப். 14-

வாக்களித்த மக்களை ஏமாற்றி பதவிக்காக கட்சி மாறிய சுய நல அரசியலுக்கு இடைத்தேர்தலில் மக்கள் முற்றுப் புள்ளி வைக்க வேண்டும் என 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது குறித்து 12.09.2026 தேதிய 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் கூறியிருப்பதாவது:-

தமிழகத்தில் மே 10ம் தேதி புதிய அரசு பொறுப்பேற்ற, 5 மாதத்தில் தாராபுரம், மதுராந்தம் தொகுதிக்கு இடைத்தேர்தல் வர உள்ளது. தேர்தலில் 2 தொகுதிகளில் போட்டியிட்டு வெற்றி பெற்ற முதல்வர் விஜய், திருச்சி கிழக்கு தொகுதி எம்எல்ஏ பதவியை ராஜினாமா செய்தார். ராஜினாமா மூலம் ஒரு தொகுதியை ஏற்கனவே இழந்துள்ள தவெக அரசுக்கு, காங்., விடுதலை சிறுத்தைகள், கம்யூனிஸ்ட்கள், ஐயூஎம்எல் உள்ளிட்ட கட்சிகள் ஆதரவு அளித்ததன்மூலம் அரசுக்கு பெரும்பான்மை கிடைத்தது.

இந்த சூழலில் அமைச்சர் பதவிக்கு ஆசைப்பட்டு அதிமுகவில் ஒரு பிரிவினர் தவெக ஆதரவு நிலை எடுத்தனர். இதில் அதிமுக எம்எல்ஏக்களான மதுராந்த கம் மரகதம் குமரவேல், தாராபுரம் சத்திய பாமா, பெருந்துறை ஜெயக்குமார், அம்பாசமுத்திரம் இசக்கி சுப்பையா, கரூர் எம்.ஆர்.விஜயபாஸ்கர், விராலிமலை சி.விஜயபாஸ்கர் ஆகியோர் பதவியை ராஜினாமா செய்து த.வெ.க.வில் இணைந்தனர்.


தினகரன்
செப்டம்பர் 12, 2026 சனிக்கிழமை
தீர்ப்பை மாற்றுங்கள்
தமிழகத்தில் மே 10ம் தேதி புதிய அரசு பொறுப்பேற்ற, 5 மாதத்தில் தாராபுரம், மதுராந்தம் தொகுதிக்கு இடைத்தேர்தல் வர உள்ளது. தேர்தலில் 2 தொகுதிகளில் போட்டியிட்டு வெற்றி பெற்ற முதல்வர் விஜய், திருச்சி கிழக்கு தொகுதி எம்எல்ஏ பதவியை ராஜினாமா செய்தார். ராஜினாமா மூலம் ஒரு தொகுதியை ஏற்கனவே இழந்துள்ள தவெக அரசுக்கு, காங்., விடுதலை சிறுத்தைகள், கம்யூனிஸ்ட்கள், ஐயூஎம்எல் உள்ளிட்ட கட்சிகள் ஆதரவு அளித்ததன்மூலம் அரசுக்கு பெரும்பான்மை கிடைத்தது. இந்த சூழலில் அமைச்சர் பதவிக்கு ஆசைப்பட்டு அதிமுகவில் ஒரு பிரிவினர் தவெக ஆதரவு நிலை எடுத்தனர். இதில் அதிமுக எம்எல்ஏக்களான மதுராந்தகம் மரகதம் குமரவேல், தாராபுரம் சத்தியபாமா, பெருந்துறை ஜெயக்குமார், அம்பாசமுத்திரம் இசக்கி சுப்பையா, கரூர் எம்.ஆர்.விஜயபாஸ்கர், விராலிமலை சி.விஜயபாஸ்கர் ஆகியோர் பதவியை ராஜினாமா செய்து தவெகவில் இணைந்த

இதையடுத்து முதல்வர் விஜய் போட்டி யிட்ட திருச்சி கிழக்கு உட்பட 7 தொகுதிகள் காலியானதாக அறிவிக்கப்பட்டது.

இந்த பரபரப்பான சூழலில் தேர்தல் தொடர்பான வழக்குகள் நிலுவையில் உள்ளதால் திருச்சி கிழக்கு, கரூர், விராலிமலை, அம்பாசமுத்திரம், பெருந்துறை ஆகிய 5 தொகுதிகளில் இடைத்தேர்தல் நடத்த ஐகோர்ட் தடை விதித்துள்ளது. இதையடுத்து மதுராந்தகம், தாராபுரம் தொகுதிகளுக்கு மட்டும் வரும் அக்.6ம் தேதி இடைத்தேர்தல் நடைபெறுமென தேர்தல் ஆணையம் அறிவித்தது.

இடைத்தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் பட்டியலை தி.மு.க., அ.தி.மு.க. கட்சிகள் வெளியிட்டுள்ளன. தவெக சார்பில் ஏற்கனவே அதிமுகவில் போட்டியிட்டு வெற்றி பெற்று ராஜினாமா செய்த மரகதம் குமரவேல், சத்தியபாமா ஆகியோரே, முறையே மதுராந்தகம், தாராபுரம் தொகுதிகளுக்கு வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

ராஜினாமா செய்ததுமே, த.வெ.க. வேட்பாளர்களாக இந்த இருவர்தான் அறிவிக்கப்படுவார்கள் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. அதேபோல அறிவிக்கப்பட்டுள்ளது அவர்களுக்கு மகிழ்ச்சி அளித்தாலும், த.வெ.க. சார்பில் போட்டியிட்டு தோல்வி அடைந்தவர்கள் மத்தியில் அதிருப்தி உள்ளதாக தகவல்கள் வெளியாகி யுள்ளன.

ஏற்கனவே, கஜானா காலி என கிடைக்கும் இடமெல்லாம் தவெக அரசின் முதல்வர் முதல் அமைச்சர்கள், எம்எல்ஏக்கள் வரை கூறி வருகின்றனர். அரசுக்கு பெரும்பான்மை கிடைத்தும் தூண்டிலிட்டு அதிமுக எம்எல்ஏக்களை இழுத்ததோடு, தற்போது இடைத்தேர்தலுக்காக ஆகும் செலவினங்களை எந்த கணக்கில் சேர்ப்பீர்கள்? அது அநாவசிய செலவு பட்டியலில் சேராதா? ஒரு தொகுதியில் எம்எல்ஏ இறந்தால், தவிர்க்க முடியாத சூழலில் ராஜினாமா செய்தால் இடைத்தேர்தல் நடத்தலாம்.

ஆனால், பதவி ஆசைக்காக கட்சி மாறி ராஜினாமா செய்வது எந்த மாதிரியான அரசியல் சேவை என்ற கேள்வி எழுகிறது. உங்களை அரியணையில் அமர்த்துவதற்காக மக்கள், சுட்டெரிக்கும் வெயிலில் வரிசையில் நின்று வாக்களித்திருக்கிறார்கள். அவர்களை மீண்டும் சந்தித்து, வேறு கட்சிக்காக ஓட்டு கேட்டு செல்வது நியாயமான செயல்தானா?

இது உங்கள் மீது நம்பிக்கை வைத்து வாக்களித்த மக்களுக்கு நீங்கள் செய்யும் துரோகமிது. இதுபோன்ற சுயநல அரசியலுக்கு ஒருபோதும் மக்கள் ஆதரவே அளிக்கக்கூடாது. தமிழகத்திற்கு ஏற்கனவே கிடைத்த ஒரு மாற்றம், வாக்களித்த மக்களுக்கு ஏமாற்றமாகி இருக்கிறது. இந்த சூழலில் இடைத்தேர்தலில் மக்கள் சுயநல அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்பதே அனைவரின் கருத்தாகும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



விஜயின் தரம் தாழ்ந்த பேச்சைக் கண்டித்து ஒருங்கிணைந்த திருவள்ளூர் மாவட்டம் தி.மு.க. சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் திருவள்ளூரில் மத்திய மாவட்டச் செயலாளர் முன்னாள் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தலைமையில் மேற்கு கிழக்கு மாவட்ட செயலாளர்கள் திருத்தணி எஸ்.சந்திரன், வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் முன்னிலையில் நடைபெற்றது. இதில் முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர்கள் வி.ஜி.இராஜேந்திரன், ஆ.கிருஷ்ணசாமி, டி.ஜெ.கோவிந்தராஜன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் திருத்தணி எம்.பூபதி, கே.ஜெ.ரமேஷ், உள்பட மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் பகுதி செயலாளர்கள், கழக நிர்வாகிகள் 5000த்திற்கும் மேற்பட்டோர் பெருந்திரளாக கலந்து கொண்டார்கள்.



வேலூர் அண்ணா கலையரங்கம் அருகில் வேலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் கழகத் தலைவர் மு. க. ஸ்டாலின் அவர்களையும், மிசா கால அடக்குமுறைகள் மற்றும் ஜனநாயகத்திற்காக கழகத் தோழர்கள் செய்த தியாகங்களை கொச்சைப் படுத்தும் வகையிலும் சட்டமன்ற அவையில் தமிழக முதலமைச்சர் ஜோசப் விஜய்தெரிவித்த சர்ச்சைக்குரிய கருத்துகளுக்கு எதிராக கண்டனப் போராட்டத்தில் தெற்குமாவட்ட செயலாளர் ஏ.பி. நந்தகுமார் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த்மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமது சகி,மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் மாநில மகளிர் அணி பிரச்சார குழு செயலாளர் அமலு, மாநகராட்சி மேயர் சுஜாதா மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மு.பாபு ஆகியோர் கலந்து கொண்டு கண்டன பேருரை ஆற்றி கண்டன முழக்கங்களை எழுப்பினார்கள். இதில் மாவட்ட நிர்வாகிகள் மாநில நிர்வாகிகள், மாவட்டப் பொருளாளர்கள் மாவட்ட துணை செயலாளர்கள் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் ஒன்றிய நகர பகுதி பேரூர் கழக செயலாளர்கள் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொது குழு உறுப்பினர்கள், மாவட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள், ஆயிரக்கணக்கான தொண்டர்கள், பொது மக்கள் கலந்து கொண்டு கண்டன முழக்கங்கள் எழுப்பினார்கள்.